**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

**அவசரக் கூட்டப்பொருள்**

2011ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம்தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்டரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**பொருள்கள்**

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| 19.01.2011 | 1. தூத்துக்குடி மாநகரில் கடந்த இரண்டு மாதங்களாக வடகிழக்கு பருவமழையின் காரணமாக நவம்பர் மற்றும் டிசம்பர் 2010 முதல் வாரத்திலான காலப்பகுதியில் பெய்த கனமழையின் காரணமாக தபால் தந்தி காலனி, முத்தம்மாள் காலனி, லூர்தம்மாள்புரம் மற்றும் தூத்துக்குடி ரூரல் பகுதிகளிலும் சாலைகளிலும் மழைநீர் தேங்கியிருந்தபடியினால், தீயணைப்பு இயந்திரங்கள் மூலமாகவும், மோட்டார் பம்ப் செட்டுகள் மூலமாகவும் வெள்ள நீரை அகற்றும் பணி நடைபெற்றது. கடந்த 25 தினங்களாக இரவு பகலாக நடைபெற்று மழைநீரை அகற்றும் பணி நடைபெற்று வந்தபோதிலும் உடனடியாக முழுவதுமாக அகற்ற இயலாத நிலை ஏற்பட்டது.<br><br>தூத்துக்குடி மாநகர் பகுதி கடல் மட்டத்தைவிட தாழ்வாக இருப்பதாலும், நிலத்தடி நீர் ஊறிக்கொண்டேயிருப்பதாலும் குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் தேங்கி தொற்று நோய்களை பரப்பும் கொசு மற்றும் ஈக்களை பெருக்கி பெரும் சுகாதார கேட்டை ஏற்படுத்தும் நிலை ஏற்பட்டது. எனவே இனி வருங்காலங்களில் நிரந்தரமாக மழைநீர் தேங்குவதை தவிர்க்க உரிய நிபுணர்களை நியமனம் செய்து மழைநீர் தேங்குதல் மற்றும் நிலத்தடி நீர் தேங்குதல் போன்றவற்றை தடுப்பதற்குரிய வழிமுறைகளை ஆய்வு செய்து அறிக்கை பெற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கடிதம் எண். ஜி4/55587/2010 நாள் 27–12–2010ல் தெரிவித்துள்ளார்கள்.<br><br>எனவே தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனம் (TNUIFSL) சென்னையின் வல்லுனர்களை நியமனம் செய்ய கேட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலமாக கடிதம் அனுப்பவும், வல்லுனர்களின் அறிக்கை பெறவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** : அனுமதிக்கலாம்.<br><br>இ1/19870/2010 | 274) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 2. | இம்மாநகராட்சிக்கு 13வது நிதிக்குழு நிதித் திட்டத்தின் (2010–11 முதல் 2014–15 வரை) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ. 8266959/– (ரூபாய் எண்பத்தி இரண்டு லட்சத்தி அறுபத்தாறாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தொன்பது மட்டும்) முதல் தவணையாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசாணை எண் 306 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை நாள் 09–12–2010ல் கீழ்க்கண்ட முன்னுரிமை அடிப்படையில் நிதியினை செலவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>1. உள்ளாட்சி அமைப்பினால் பாதாள சாக்கடை திட்டத்திற்கு TWAD போர்டுக்குபஙகுத் தொகையினை செலுத்துதல்.<br>2. உள்ளாட்சி அமைப்புக்கான மின்சார கட்டணம்<br>3. உள்ளாட்சி அமைப்பினால் TWAD போர்டுக்கு செலுத்தப்பட வேண்டிய குடிநீர் கட்டணம்.<br>4. தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு<br><br>இம்மாநகராட்சியின் பங்கு தொகையாக பாதாள சாக்கடை திட்டத்திற்கு நிதி எதுவும் செலுத்தப்பட வேண்டியதில்லை. எனவே இம்மாநகராட்சியின் மின்கட்டணம் ஏப்ரல் 2010 முதல் ரூ. 1.49 கோடி நிலுவையாக உள்ளது. எனவே ஒதுக்கப்பட்ட நிதி ரூ 8266959/– (ரூபாய் எண்பத்தி இரண்டு லட்சத்தி அறுபத்தாறாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தொன்பது மட்டும்)ஐ மின் கட்டணத்திற்கு செலுத்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம். இ1/16846/2010 | 275) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட் டது |
| | 3 | இம்மாநகராட்சி பகுதிகளில் தொடர்ந்து பெய்த கனமழையின் காரணமாக கொசு மற்றும் ஈக்களின் தொல்லை மிகவும் அதிகமாக உள்ளது. இதனால் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே கொசு புழுக்களை ஒழிக்க Mosquito larvicide என்ற பூச்சி கொல்லி மருந்து 1000 லிட்டர் தேவையாக உள்ளது. நே.மு.க.எண். 60560/06/ஜெ2 நாள் 12/09/2009 என்ற கடிதத்தின்படி நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களும் இதனை வாங்க பரிந்துரை செய்துள்ளார்கள். அவசர அவசியம் கருதி இந்த வேதி மருந்துகளை வாங்குவதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ 1.85 லட்சமாகும். (ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்தி ஐயாயிரம் மட்டும்) தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**குறிப்பு** 1. அனுமதிக்கலாம்<br><br>2. மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதிபெற்று நடவடிக்கை எடுத்ததையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>எச்4/10463/2009 | 276) அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட் டது. அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக்கப்ப ட்டது |
| | 4. | இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட ஆண்டு குத்தகை இனங்களின் கீழ் மாமன்ற தீர்மான எண்.63 நாள் 22–03–2010 மாமன்ற தீர்மான எண். 95 நாள் 19–04–2010ல் அனுமதிக்கப்பட்ட 27 இனங்களுக்கு உயர்ந்தபட்ச கேள்வி அனுமதிக்கப்பட்டு உரிமம் வழங்கப்பட்ட உாமைதாரர்களுக்கு அவர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள 2010–2011ம் வருட உரிமத்தொகையில் 5% உயர்வு செய்து 2011–2012ம் வருடம் உரிமம் நீடித்து வழங்க கோரி 27 உரிமைதார்கள் சமர்பித்துள்ள சம்மதக் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | 277) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |

| வ. எண் | ஏல இனம் | உரிமைதாரர் பெயர் மற்றும் முகவரி | 2010–2011 ஆண்டு ஏலத் தொகை | 5% உயர்வு தொகை | 2011–2012ம் ஆண்டு நிர்ணயம் செய்ய வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | விக்டோரியா தொடர் சாலையில் உள்ள வ.உ.சிதம்பரம் மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூலிக்க உரிமை மற்றும் மீன் சந்தை வியாபாரிகளுக்கு தட்டுமுட்டு சாமான்கள் சப்ளை செய்து கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு.கே. சிம்சன், 79எஸ்.பி.ஜி. கோயில் தெரு, தூத்துக்குடி. | 892000 | 44600 | 936600 |
| 2 | எஸ்.எஸ்.தெரு மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திருமதி. சி. நளினி க/பெ. ஆர். சந்திரசேகர் 58 வடக்கு வானியம் விளை, தூத்துக்குடி | 99000 | 4950 | 103950 |
| 3 | சிதம்பரநகர் மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு.பி. குமார் த/பெ. பெருமாள், 30/4 டூவிபுரம் 11வது தெரு, தூத்துக்குடி | 256000 | 12800 | 268800 |
| 4 | கீழரதவீதி தொடர்ச்சி மற்றும் கீழரதவீதி சாலை ஓரகடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு.எம்.அமீது த/பெ. முகமது அப்துல்லா111/67 /14 போல்பேட்டை, தூத்துக்குடி. | 87150 | 4358 | 91508 |
| 5 | போபால்சாமி தெரு சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | எஸ்.வேல்ராஜ் த/பெ. திரு. சண்முகராஜ் 32.சேதுராஜா தெரு தூத்துக்குடி. | 99300 | 4965 | 104265 |
| 6 | தச்சர் தெரு மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திருமதி,கே, பிரகாச சகிலா க/பெ.கோபால ராஜ் 47/5 ஆதிபராசக்தி நகர், தூத்துக்குடி. | 28000 | 1400 | 29400 |
| 7 | மாநகராட்சி புதியபேருந்து நிலையத்தினுள் வந்து போகும் பேருந்துகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் 15 கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு ஏ.சி. அருணாசலம் த/பெ. எஸ்.செல்லப்பா 156 பூபாலராயர்புரம் தூத்துக்குடி. | 800000 | 40000 | 840000 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்திலுள்ள சைக்கிள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு.என்.செல்லப்பாண்டி த/பெ.எம். நாராயணன், 73இ, போல்பேட்டை தூத்துக்குடி | 330000 | 16500 | 346500 | |
| | | 9 | மாநகராட்சி புதியபேருந்து நிலையத்திலுள்ள நவீன கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு.கே.சுந்தரவேல் த/பெ. கந்தசாமி 41/1 கே.வி.கே.நகர் தூத்துக்குடி | 120000 | 6000 | 126000 | |
| | | 10 | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்திலும் சுற்றியுள்ள பகுதிகளிலும் பூ தலை சுமை மூலம் கூவி விற்கும் உரிமை | திரு எம். செண்பகராஜ் த/பெ. முத்துவேல் 61பி/1சி போல்பேட்டை தூத்துக்குடி | 17000 | 850 | 17850 | |
| | | 11 | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் தலை சுமை மூலம் வளையல் கூவி விற்கும் உரிமை | திரு எம். செண்பகராஜ் த/பெ. முத்துவேல் 61பி/1சி போல்பேட்டை தூத்துக்குடி | 48000 | 2400 | 50400 | |
| | | 12 | மாநகராட்சி புதியபேருந்து நிலையத்தில் தலை சுமை மூலம் செய்தித்தாள் கூவி விற்கும் உரிமை | என்.சி. நாராயணன் த/பெ. திரு. என். செல்லபாண்டி 73/11இ போலபேட்டை தூத்துக்குடி. | 32500 | 1625 | 34125 | |
| | | 13 | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் மாநகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் அனுமதிக்கப்படும் இடத்தில் ஒரு தானாக இயங்கும் எடை பார்க்கும் இயந்திரம் நிறுவிக்கொள்ளும் உரிமை | திரு.வி. ராம்குமார் த/பெ. திரு. வரதராஜன் 61எ, போல்பேட்டை தூத்துக்குடி. | 4800 | 240 | 5040 | |
| | | 14 | மாநகராட்சி அண்ணாபேருந்து நிலையத்தினுள் வந்து போகும் பேருந்துகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் 8 கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு.எஸ்.வி. ஜெயசீலன் 27 வானியன் விளை தெற்கு தெரு, தூத்துக்குடி. | 585000 | 29250 | 614250 | |
| | | 15 | மாநகராட்சி அண்ணாபேருந்து நிலையத்தினுள் நவீனகட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு.பி. குமார் த/பெ.பெருமாள் 63ஏ.டுவிபுரம் 11வது தெரு, தூத்துக்குடி. | 224000 | 11200 | 235200 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 16 | மாநகராட்சி அண்ணாபேருந்து நிலையத்தினுள் கீழ்புரம் மற்றும் மேல்புரமுள்ள இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு. ஜெ. பெரியராஜ் த/பெ. ஜெபமணி 37/4 டூவிபுரம் 7வது தெரு தூத்துக்குடி. | 206100 | 10305 | 216405 | |
| | | 17 | மாநகராட்சி அண்ணா பேருந்து நிலையத்திலும் சுற்றியுள்ள பகுதிகளிலும் பூ தலை சுமை மூலம் கூவி விற்கும் உரிமை | எஸ்.என். கணேசன் 21. சங்கராபுரம் தூத்துக்குடி. | 152600 | 7630 | 160230 | |
| | | 18 | மாநகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தில் தலை சுமைமூலம் செய்தித்தாள் கூவி விற்கும் உரிமை | திரு. மீனாட்சி விஸ்வநாதன் த/பெ. பி. நம்பி 24ஜெ. பிரையண்ட் நகர் 4வது தெரு தூத்துக்குடி | 19700 | 985 | 200685 | |
| | | 19 | மாநகராட்சி அண்ணாபேருந்து நிலையத்தில் தலை சுமை மூலம் வளையல் கூவி விற்கும் உரிமை | திருமதி.எம். வேலம்மாள் க/பெ. ஜி. முத்தையா 9 அண்ணா நகர் 3வது தெரு தூத்துக்குடி. | 35800 | 1790 | 37590 | |
| | | 20 | மாநகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தில் மாநகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் ஒரு தானாக இயஙகும் எடை பார்க்கும் இயந்திரம் நிறுவிக்கொள்ளும் உரிமை | திரு.இ. ராம் குமார் த/பெ. டி. எபனேசர்145ஏ/ 5 தாமோதர நகர் தூத்துக்குடி | 6500 | 325 | 6825 | |
| | | 21 | மாநகராட்சி தெற்கு காட்டன் ரோடு நவீன கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு.டி. ஜெபஸ்தியான் 5/41 பீச் ரோடு இனிக்கோ நகர் தூத்துக்குடி. | 171000 | 85650 | 179550 | |
| | | 22 | மாநகராட்சி மாசிலலமணி பூஙகாவிலுள்ள நவீன கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு.இ. மனோகரன் த/பெ. எட்வர்ட் நாடார் 5 டேவிஸ்புரம் ரோடு தூத்துக்குடி. | 49800 | 2490 | 52290 | |
| | | 23 | மாநகராட்சி ஜெயராஜ் ரோட்டிலுள்ள மாநகராட்சி வணிகவளாக காம்பவுண்டுக்குள் மாநகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் நிறுத்தப்படும் சைக்கிள்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமை | திரு.பி. குமார் த/பெ. பெருமாள் 63ஏ டூவிபுரம் 11வது தெரு தூத்துக்குடி. | 91500 | 4575 | 96075 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 24 | அண்ணா பேருந்து நிலையத்தில் தங்கும் விடுதியில் (4 டபுள் காட் ரூம் 8 சிங்கிள் ரூம் மேற்படி 12 அறைகளுக்கும் வாடகை கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு.என்.எஸ். பாலகிருஷ்ணன் த/பெ. நடராஜன் 18எ/20 திரவியபுரம் 4வது தெரு தூத்துக்குடி | 133000 | 6650 | 139650 |
| 25 | மாநகராட்சி நவீன ஆட்டடிச்சாலையில் அறுக்கும் ஆடுகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்வார்டு எண் 5,17,21,25,38,43,48,50 | திரு.ஏ.சி.அரு ணாசலம் த/பெ. எஸ். செல்லப்பா 156 பூபாலராயர்புரம் தூத்துக்குடி | 208000 | 10400 | 218400 |
| 26 | மாநகராட்சி பகுதியில் ஆடுகள் அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (வார்டு எண் 5,17,21,25,38,43,48,50 தவிர மீதமுள்ள வார்டுகள் | என். சி. நாராயணன் த/பெ. திரு என். செல்லப்பாண்டி 73/11இ போல்பேட்டை தூத்துக்குடி. | 258000 | 12900 | 270900 |
| 27 | மாநகராட்சி பகுதியில் மாடுகள் அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | திரு.எஸ். ஜான்சன் 93ஐ/26பி. அசோக்நகர் 2ம் தெரு, தூத்துக்குடி. | 57000 | 2850 | 59850 |

**அலுவலகக் குறிப்பு**

மேற்கண்ட பட்டியலின்படி 27 குத்தகை இனஙகளுக்கு 2010–2013ம் ஆண்டு பொது ஏல நிபந்தனை எண் 2ன் படி 2011–2012ம் ஆண்டிற்கு உரிமம் நீடித்து வழஙகுமாறு தற்போதைய உரிமைதாரர்கள் கோரியுள்ள விண்ணபத்தினை ஏற்று கலம் 6ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குத்தகை தொகைக்கு 2011–2012ம் ஆண்டிற்கு 2010–2011ம் ஆண்டு ஏல நிபந்தனைகளுக்கு உட்பட்டு உரிமம் நீடித்த அனுமதி வழஙகலாம்.

அ16/510/2010

5. இம்மாநகராட்சியில் வரி மேல் முறையீட்டுத் தீர்ப்பாய நீதிபதி அவர்களின் இல்லத்திற்கு அரசு ஆணை எண். 864 (Home) நாள் 5–10–2010ன் படியும் மற்றும் உதவி இயக்குநர், உள்ளாட்சி தணிக்கைத்துறை அவர்களின் 8–12–2010ம் தேதி வழங்கிய அறிவுரையின் பேரிலும் பிரதி மாதம் தோறும் தினமலர் மறற்றும் இந்து செய்தித் தாள்கள் வாங்கிய தொகைக்கு பில்படி 100 % வழங்கவும் பியூல் சார்ஜ் 50% வழங்கவும், வாடகை வீட்டிற்கு செலுத்தும் மின்கட்டணம் பில்லில் 50% வழங்கவும் மேற்படி வீட்டிற்கு கட்டப்படும் தண்ணீர்த் தீர்வையில் 50% வழங்கவும் அதற்குரிய செலவுத் தொகையினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு** – அனுமதி வழங்கலாம். எ18/20521/2010

278) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது

6. இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட பாளை ரோடு வணிக வளாக கடை எண் 20, 21 ஒரே கடையாக மாற்றப்பட்டு மாநகராட்சி சொத்து வரி கணினி வசூல் மையம் செயல்பட்டு வந்தது. இம்மாநகராட்சி புதிய அலுவலக கட்டிடம் செயல்பட துவங்கியதால் மேற்படி வசூல் மையம் மாநகராட்சி அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. தற்போது இக்கடை காலியாக உள்ளதால் ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டுகளுக்கு ஒரே கடையாக உரிமம் வழங்க பொது ஏல நிபந்தனைகளின் படி பொது ஏலம் நடத்தவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் இதன் விபரம் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவு தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1) ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டுகளுக்கு உரிமம் வழங்க பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்

2) அதற்கு ஆகும் செலவினங்களுக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ16/11574/2006

279) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது

7. தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் இயற்கை இடர்பாடு மற்றும் வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்டுள்ள தார்ச்சாலைகளை சீரமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.41696/2010/இ2 நாள் 14–01–2011ல் ரூ 501.40 லட்சத்திற்கு கீழ்க்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தெற்கு புதுத் தெருவில் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் கட்டும் பணி | 31.50 |
| 2 | தட்டார் தெருவில் சிமெண்ட தளம் போடுதல் | 16.30 |
| 3 | பாத்திமா நகர் 1,2, மற்றும் 3வது தெருக்களில் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் | 15.00 |
| 4 | சுந்தரவேல்புரம் 6,7 மற்றும்8வது தெருக்களில் சிமிண்ட் தளம் அமைத்தல் | 50.30 |
| 5 | சுந்தரவேல்புரம் மேற்கு (அம்பேத்கார் நகர் குறுக்குத் தெரு) சிமெண்ட் தளம் போடுதல் | 57.75 |
| 6 | போல்பேட்டை வடக்கு, தெற்கு மெயின் ரோட்டில் சிமிண்ட் தளம் அமைத்தல் | 14.95 |
| 7 | மேலூர் பங்களாத் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 20.00 |
| 8 | மேல சண்முகபுரம் 2ம் தெருவில் சிமிண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல். | 23.80 |
| 9 | அழகேசபுரம் குறுக்குத் தெருவில் தார்தளம் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் | 19.60 |
| 10 | எஸ்.எஸ். தெரு முதல் முத்துக்கிருஷ்ணாபுரம் வரை தார் தளம் அமைத்தல் | 14.00 |
| 11 | தெற்கு காட்டன் ரோடு தொடர்ச்சி, காந்தி நகர் 2 மற்றும் 3வது தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 23.00 |
| 12 | மாசிலாமணிபுரம் பகுதியில் தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 20.00 |
| 13 | பூபாலராயர்புரம் 1வது முதல் 5வது தெரு வரை தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 27.00 |
| 14 | டூவிபுரம் 4, 10, 11 தெருக்கள் மற்றும் டூவிபுரம் மெயின் ரோடு (ராஜ் தியேட்டர் எதிர்புறம் ) பகுதிகளில் தார் சாலை அமைத்தல். | 38.20 |
| 15 | முத்துக்கிருஷ்ணாபுரம் 6வது தெருவில் தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல். | 72.60 |
| 16 | ஸ்டேட்பாங்க் காலனி, நடராஜ நகர் மற்றும் குறுக்குத் தெருவில் தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 57.40 |
| | மொத்தம் | 501.40 |

280) பதிவு செய்யப்பட்டது

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம்<br><br>இ1/19870/2010 | |
| 8, | தூத்துக்குடி மாநகராட்சி பாதாள சாக்கடை திட்டத்திற்கு அரசு ஆணை எண்(டி)419, நாள்18.10.2005 இல் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது ஆணையில் முதலில் இறுதி செய்யப்பட்ட மொத்த மதிப்பீடு ரூ46.40 கோடி எனவும், நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய ASP (Activated Sludge Process) முறையில் சுத்திகரிப்பு நிலையம் செயல்படுத்த ஏற்பட்டுள்ள கூடுதல் செலவினத்திற்கு திருத்திய திட்ட மதிப்பீடு தொகை ரூ82.82 கோடிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(மாந2) அரசு ஆணை எண்(டி) 551, நாள் 30.12. 2009 இல் திருத்திய நிர்வாக அனுமதி அளித்துள்ளது. மேற்கண்ட திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கு இம்மாமன்றம் 04.01.2010 ஆம் தேதி, தீர்மானம் எண்1, இல் ஒப்புதல் அளித்துள்ளது.<br>தமிழ்நாட்டில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் செயல்படுத்தும் சுத்திகரிப்பு நிலையத்தினை தற்போது புதிய நவீன தொழில் நுட்ப மூலம் செயல்படுத்தலாம் என மாநில அளவில் அங்கீகரிப்பு கூட்டத்தில் 21.12.2005 ஆம் தேதியில் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, உயர்மட்ட தொழில் நுட்ப பொறியியல் வல்லுநர்களால் மாநில அளவில் குழு அமைக்கப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படித் திட்டத்திற்கு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி இம்மாநகராட்சிக்கு சொந்தமான புல்தோட்டம் பகுதியில் சர்வே எண் 352/2,36/1 வார்டு 2 , பிளாக் 3 இல் அமைந்துள்ள 5.22 ஏக்கரில் (ASP) என்ற நவீன முறையில் செய்வதற்கு தொழில் நுட்ப நிலைக்குழுவால் பரிந்துரை செய்யப்பட்டு பணி செய்வதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய ASP (Activated Sludge Process) முறையில் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டது.<br><br>மேற்கண்ட பணி நடைபெற்று வருகையில் இம்மாநகராட்சிக்கு சொந்தமான புல் தோட்டம் பகுதியில் பாதாள சாக்கடை திட்டப்பணிக்கான சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து இப்பகுதியை சுற்றியுள்ள வார்டு பொது மக்கள், குடியிருப்பு நல சங்கங்கள், மக்கள் பாதுகாப்பு இயக்கம், மற்றும் வியாபார பெரு மக்கள், சில அரசியல் கட்சி பிரமுகர்கள் எதிர்ப்புகள் மற்றும் ஆர்ப்பாட்டம் நடத்தியும், உண்ணாவிரதமும் இருந்து 19.07.2010இல் முற்றுகையிட்டு பணிகளைத் தடுத்து நிறுத்தி எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.<br><br>இச்சூழ்நிலையில் இம்மாநகராட்சிப் பகுதியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடைத் திட்டப்பணிக்கு அமைக்கப்படவுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை தருவைகுளம் பகுதியில் மாற்றியமைக்கவும், ஏற்கனவே இம்மாநகராட்சிக்குச் சொந்தமான புல்தோட்டம் பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகள் சம்பந்தமாக இது வரை மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ2.64 கோடியினை திட்ட மதிப்பீட்டுடன் சேர்த்து ஆணை பிறப்பிக்க அரசினைக் கேட்டுக்கொள்ளவும் மாமன்றம் தீர்மானம் எண் 268, நாள் 16.12.2010 இல் தீர்மானித்துள்ளது.<br><br>மேற்கண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகளுக்கு இதுவரை மேற்கொள்ளப்பட்ட செலவினத் தொகை ரூ2.64 கோடியினை அரசு மானியத்தில் இருந்து பெற இயலாது என தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், பொது மக்கள் எதிர்ப்பின் காரணமாக மாற்றிடம் தெரிவு செய்யப்பட்டுள்ளதால், மேற்கண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகளுக்கு இது வரை மேற்கொள்ளப்பட்ட செலவினத் தொகை ரூ2.64 கோடியினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஏற்றுக்கொள்ள மாமன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>** . புல்தோட்டம் பகுதியில் நடைபெற்ற கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகளுக்கு இதுவரை மேற்கொள்ளப்பட்ட செலவினத்தொகை ரூ2.64 கோடியினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தலாம்.<br><br>இத்தொகையை 12 மாத தவணைகளில் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ3 / 11512/2007 . STP | 281)<br>அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

9. இம்மாநகராட்சி கட்டுப்பாட்டிலுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை உபயோகத்திற்கு தேவையான மருந்து பட்டியலை மருத்துவ அலுவலர் சமர்ப்பித்துள்ளார். பட்டியலில் கண்ட மருந்துகளின் உத்தேச விலை ரூ.27756/— என தெரிவித்துள்ளார். பட்டியலில் கண்ட மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகத்தின் மூலம் பெற்றுக்கொள்ள தொகை ரூ 27756/—க்கான வங்கி வரைவோலை The Managing Director. Tamil Nadu Medical Service Corporation Ltd., Chennai க்கு வழங்க கோரியுள்ளார்.

மருத்துவ அலுவலர் சமர்ப்பித்துள்ள மருந்து பட்டியலில் கண்ட மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் வாங்கி கொள்ளவும் அதற்கான செலவுத்தொகை ரூ 27756/—க்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** — அனுமதிக்கலாம் சி4/010095/2009

282) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

10. தூத்துக்குடி மாவட்டத்தில் நகர்புறஙகளில் வசிக்கும் மாற்று திறனாளிகளுக்கு வாழ்வாதாரம் அமைத்துக்கொடுக்கும் நல்லெண்ணத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தஙகள் கட்டுப்பாட்டிலுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடஙகளில் ரூ 3000/— ஊதியத்தில் இந்துஸ்தான் யூனிலீவர் லிமிடெட் சார்பில் இலவசமாக காபி , டீ விற்பனை மையம் அமைக்க அனுமதி வழஙகப்பட்டுள்ளதாகவும் அதன்படி கீழ்க்கண்ட இடஙகளில் மாற்று திறனாளிகளுக்கு போக்குவரத்து சுற்றுசூழல் மற்றும் செயல்பாடுகளுக்கு பொதுமக்களுக்கு இடையூறு இல்லாவண்ணம் மேற்படி விற்பனை மையம் அமைத்துக்கொள்ள அனுமதிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறை ந.க.எண். 1382/அ1/2010 நாள் 10—11—2010ன் படி உத்திரவிட்டுள்ளார். அதன்படி இடம் ஒதுக்கீடு செய்து வழஙக மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | மாற்றுதிறனாளி பெயர் , முகவரி | அனுமதிக்கும் இடம் |
|---|---|---|
| 1 | திரு.ச. ராஜா<br>த/பெ. ஏ. சந்தணபிச்சை<br>4/84 அந்தோணியார்புரம்,<br>மீளவிட்டான்,<br>தூத்துக்குடி. | புதிய பேருந்து நிலையம் இலவச கழிப்பிட கட்டிடத்திற்கு மேற்கு பகுதியில் உள்ள ஆர்ச் வளைவு காலியிடத்தில் (6X6) அளவில் |
| 2 | திரு.அருணாசல நம்பி<br>த/பெ. எஸ். ஐய்யப்பன்<br>94/12 வி.இ. ரோடு<br>தூத்துக்குடி. | பழைய பேருந்து நிலையத்தில் Tan Tea கடை அருகில் உள்ள காலியிடத்தில் ( 6 X 6) அளவில் |
| 3 | திரு.சீனிவாசன்<br>த/பெ. திருமலை<br>1/178டி கதிர்வேல் நகர்,<br>தூத்துக்குடி. | மாநகராட்சி அலுவலக பின்புற நுழைவு வாயில் அருகில் ( 6 X 6) அளவில் |

**அலுவலகக் குறிப்பு —** மேற்கண்ட மாற்று திறனாளிகளுக்கு அவர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள இடத்தில் காபி, டீ விற்பனை மையம் போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாவண்ணம் நிறுவிக்கொள்ள மாற்று திறனாளிகளின் நலன் கருதி இடம் ஒதுக்கீடு செய்யவும் அதற்கான வாடகை நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

அ16/18317/2010

283) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

மாமன்றம், தூத்துக்குடி
நாள் 18—01—2011

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி